# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2077/9 - 2018 ජූනි මස 25 වැනි සඳුදා - 2018.06.25

*2077/9 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

மேல் மாகாண மாகாண சபையின் 1998 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச்சட்டத்தின் கீழ் அதிகாரங்கள் உரித்தாக்கற் கட்டளை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந் தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தினாலும் மேல் மாகாண மாகாண சபையின் 1998 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 02(2) ஆம் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு மேல் மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரான கஜிற்றன் லலித் வனிகரத்ன ஆகிய நான், மேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருமாகியவருக்கு உதவும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் I ஆம் அட்டவணையின் நிரல் II இல் பதவி குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மற்றும் நிரல் I இல் பெயர் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களுக்கு மேல் மாகாண மாகாண சபையின் 1998 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 02(2) இன் கீழும் சொல்லப்பட்ட நியதிச் சட்டத்தின் 72(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செல்லுபடியாகும் கூட்டுறவுச் சங்க ஒழுங்குவிதிகளின் கீழும் மேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருமாகியவருக்கு உரித்தாக்கப்பட்ட கீழ்க்குறிப்பீடு செய்யப்பட்ட, சொல்லப்பட்ட அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் சொல்லப்பட்ட அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட திகதிகளிலிருந்து இத்தால் உரித்தாக்குகின்றேன்.*

கஜிற்றன் லலித் வனிகரத்ன,
வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம்,
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர்,
மேல் மாகாணம்.

கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்,
பத்தரமுல்லை,
*2018, யூன் 14.*

## I ஆம் அட்டவணை

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* | *நிரல் IV* |
|---|---|---|---|
| *(1)* சூரியகே சுவர்ணலதா | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (திணைக்கள) | *2018.06.01* | மேல் மாகாண மாகாண சபையின் *1998* ஆம் ஆண்டின் *03* ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் இல. *02(3)*, *4* *(4(2)* தவிர), *5*, *6*, *7*, *8.33*, *43*(அ), *43*(ஆ), *44*, *45*, *46*, *47*, *50*, *52*, *53*, *54*, *(54(2)* தவிர), *58(2)*, *59*, *67*, *68*, *69*, *74*, *76* ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவாளருக்கு உரித்தான தத்துவங்களும் கூட்டுறவுச் சங்கங்கள் விதிக்கோவையின் இல. *4*, *11*, *15*, *16*(II), *19*, *22*(II), *27*, *32*, *37*, *39*, *40*, *41*, *42*, *49*, *52*, *53* ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவாளருக்கு உரித்தான தத்துவங்களும். |

*07-293*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.